Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 04    விலை ரூபா! 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 15    ( 29 - 05 - 1991 )    புதன்கிழமை    ஓசை: 100

## அலுவலகர் கடிதங்கள் இராணுவம் பரிசீலனை

(மட்டக்களப்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வரும் கடிதங்கள் தபால் நிலையத்திலிருந்து புலனாய்வு துறைக்குச் சென்று அங்கு பிரிக்கப்பட்டு போட்டோ பிரதி எடுக்கப்பட்டு மீண்டும் விலாசத்திற்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறு இராணுவஉயர் அதிகாரி ஒருவர் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கொன்றில் தெரிவித்துள் (4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு

# புல்மோட்டையில் 8 இராணுவம் பலி

## ஒரு போராளி வீரமரணம்

(புல்மோட்டை)

சிறிலங்கா இராணுவத்தினர் மீது புல்மோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

நேற்றுக்காலை 7 30 மணியளவில் திருமலை மாவட்டத்திலுள்ள 10ஆம் கட்டை இராணுவ முகாமிற்கும், 12 ஆம் கட்டை இராணுவ முகாமிற்கும் இடையில் உள்ள மிகவும் பாதுகாப்பான பகுதியென இராணுவத்தினரால் கருதப்படும் ஆட்டுமா பாலத்தடி என்ற இடத்திற்கு அவர்கள் வந்தபோது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலில் எட்டுஇராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இவர்களின் ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### பாண்டியன்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள ஆட்டுமா பாலத்தடியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் பாண்டியன் (கன்னியா) என்ற போராளி வீரமரணம் அடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## பல நவீன ஆயுதங்கள் புல்மோட்டையில் மீட்பு

(புல்மோட்டை)

புல்மோட்டைப் பகுதியில் நேற்று நடந்த மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் பின்வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி-1
- ★ ஏ. கே. எல், எம். ஜி. ரம் மகசின்-5
- ★ ரவைக் கோர்வைகள்-500
- ★ ரி.56-ii ரக துப்பாக்கிகள் -4
- ★ ரி.56 பட்மொடல் ரக துப்பாக்கிகள்-2
- ★ ஏ கே ரவைக்கூடுகள்-24
- ★ நடுத்தர ரவைகள்-800

## திரிவேணி சங்கமத்தில் ராஜீவின் அஸ்தி கலப்பு

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அஸ்தி நேற்று பிற்பகல் திரிவேணி சங்கமத்தில் முழு அரச மரியாதையுடன் கலக்கப்பட்டது.

மறைந்த தலைவரின் அஸ்தி ஆற்றில் அவர் மகன் ராகுலினால் கலக்கப்பட்ட போது இறுதிப்பண் இசைக்கப்பட்டது அஞ்சலி செலுத்தும் வகையில் இராணுவ அணியினர் துப்பாக்கிகளைத் தளர்த்திப் பிடித்தனர் ராஜீவ் காந்தியின் உறவினர்கள் குடும்ப (4ஆம் பக்கம் பார்க்க)

## வேதாரணியத்தில் வைத்து இல. தமிழர் ஒருவர் கைது

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இலங்கைத் தமிழர் ஒருவரை தமிழ் நாட்டில்கைது செய்துள்ளார்கள். வேதாரணியத்தில் கைது செய்யப்பட்ட இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் சந்தேகம் தெரிவித்துள்ளது.

இவரிடம் ரூ 10.000 ரொக்கப்பணமும், சைனைட் குப்பியும் இருந்ததாக டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## கிளர்ச்சிப் படைகளிடம் அடிஸ்அபாபா வீழ்ச்சி

(லண்டன்)

எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ்அபாபாவும் நேற்றுக்காலை கிளர்ச்சிப்படைகளிடம் வீழ்ச்சியடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிபரின் அரண்மனை, பாதுகாப்பு அமைச்சுக் கட்டடங்கள் உட்பட பல இடங்களை கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றியிருப்பதாகவும், பல அமைச்சர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதனிடையில் கிளர்ச்சிப் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வரும் மருந்திற்கான கப்பல் கூலி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு மருந்துப் பொருள்களை கொண்டு வருவதற்கு அறவிடும் கப்பல் கூலி ஒரு லட்சத்து எண்பதினாயிரத்தால் உயர்த்தப்பட்டுள்ளதாக மருந்து பொருள்கள் விநியோகஸ்தர் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் வடபகுதிக்கு மருந்துப்பொருள்களை கொண்டு வருவதற்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா கப்பல் கூலியாக அறவிடப்பட்டது. ஆனால் இறுதியாக தாம் (4ஆம் பக்கம் பார்க்க)

## இல. தமிழ் அகதிகளை உடன் அனுப்ப திட்டமில்லை

### -சுப்பிரமணியம் சுவாமி

(டில்லி)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்கள் உடனடியாக வெளியேற்றப்படமாட்டார்கள் என்று இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய நீதி அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி இதனைத் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி மரணமடைந்ததை அடுத்து அனைத்து இலங்கைத் தமிழர்களையும் இந்தியாவில் இருந்து வெளியேற்றப் (4ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தேர்தல் திகதியில் மாற்றம் எதுவும் இல்லை

(டில்லி)

மக்கள் அவைக்கும் சில மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கும் நடக்கும் இரண்டாம் மூன்றாம் கட்ட வாக்களிப்புத் திகதிகளில் மாற்றம் எதுவுமில்லை என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட வாக்குப் பதிவு கடந்த20ஆம் திகதிநடைபெற்றது ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பின்னர் கடந்த 23 26 திகதிகளில் நடைபெற (4ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவைக்கொல்லும் அவசியம் புலிகளுக்கு இல்லை

### - இந்துவிற்கு கிட்டு பேட்டி

(லண்டன்)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கான அவசியம் ஏதும் விடுதலைப் புலிகளுக்கு இல்லை என விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாளரான திரு. கிட்டு தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகைக்கு அளித்தபேட்டியொன்றிலேயே திரு.கிட்டு இவ்வாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் ராஜீவ்காந்தியைக் கொலைசெய்யும் முயற்சியில் தாம் ஈடுபடவில்லையெனவும் தெரிவித்தார்; மேலும் அவர், கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி புலிகளின் பிரதிநிதியான காசிஆனந்தன் ராஜீவ் காந்தியைச் சந்தித்தார் என்றும், தலைவர் பிரபாகரனின் விருப்பின்பேரில் நடந்த இச்சந்திப்பின் பின்னர் நல்லுறவு இருந்ததெனவும் தெரிவித்தார்.

நாற்பத்தைந்துநிமிட நேரம் நீடித்த இச்சந்திப்பின்போது தம்மால் முடிந்தளவு இலங்கைத் தமிழர்களின் நலனைக் காக்க உதவுவதாகவும், திரு. ராஜீவ் காந்தி உறுதியளித்திருந்தாரென திரு. கிட்டு கூறினார்.

இப்படுகொலையில் புலிகளுக்கு எதிரான தமிழ்க்குழுக்கள், அல்லது இலங்கை அரசு ஈடுபட்டிருக்கலாமெனவும் திரு. கிட்டுசந்தேகம் தெரிவித்துள்ளார். இந்திய அரசு முன்பு அனைத்துக் குழுக்களுக்கும் தந்திருந்த வெடிப்பொருள்களை அவர்கள் போரில் பயன்படுத்தாமல், அப்பொருள்களைக் கொண்டு இவ்வெடி (4ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மாதத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

### - ஜே. எஸ். வர்மா

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது சம்பந்தமான விசாரணை முடிவை உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் குறிப்பிட்டிருக்கும் மூன்று மாதத்தினுள் தமது அறிக்கையை பூர்த்தி செய்து தாக்கல் செய்யப்போவதாக இவ் விசாரணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கும் திரு. ஜே. எஸ். வர்மா புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதியான திரு ஜே. எஸ். வர்மா மேலும் தெரிவிக்கையில், இதுவரை தாம் எடுத்த கமிஷன் பொறுப்பையும் ஏற்காத போதும் இது ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதாலேயே தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் இதனை தேசிய சேவைக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியில் சிக்கியோரை மீட்க யாழ். அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்கியிருக்கும் பொதுமக்களை மீட்பதற்கென சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் உட்பட அனைத்து தொண்டர் ஸ்தாபனங்களும்மேற்கொண்டமுயற்சிகள் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து யாழ். செயலக அதிகாரிகள் இம்முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்துவதற்காக அரசாங்க அதிபர் மிக விரைவில் கொழும்பு செல்லவுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**வீடு வளவு விற்பனைக்கு**

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் கோயிலடியில் 3 பரப்புக்காணியுடன் 3 அறைகள் கொண்ட வீடுவிற்பனைக்குண்டு. தொடர்பு செ.சிவகடாட்சம், வைத்தியர், அம்பாள் கோயிலடி, அளவெட்டி வடக்கு. (R/1414)

**நீமியா உரம்**

பூச்சிகளாகி நோயினால் பாதிப்புறும் செற்பயிரைக் காப்பாற்ற ''நீமியா'' உரத்தை நீரில் ஊறவைத்து வடிகட்டித் தெளியுங்கள் மைமேற் பனை. ''மில்க்வைற்'' (B 2583)

**இரசாயனம்**

A/L 91 இரசாயனம் வினா விடைவகுப்பு ஆரம்பம் 1 6 90 சனி 4.30 p m சனி, ஞாயிறு 4.30p.m சனி. ஞாயிறு 2 00p m அயன் சமநிலை ஆரம்பம். ஆசிரியர் சத்தீஸ் 108, பிறவுண் வீதி. (R/1418)


## விளையாட்டுப் போட்டி

(முல்லைத்தீவு)

மன்னார் இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த ஜெயசக்தி (முள்ளிவாய்க்கால்) ஆனையிறவு முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த கிருபா (முள்ளிவாய்க்கால் ஆகியோர் களினது நினைவாக நேற்றைய தினம் (28-5-91) மாலை 3 00 மணியளவில் முள்ளிவாய்க்கால் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

★ ★ ★

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த சுருளி. (வற்றாப்பளை) அவர்களுடைய நினைவாக நேற்று முன்தினம் (27-5-91) மாலை 3.00 மணியளவில் வற்றாப்பளை பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு

# உரம் கொண்டுசெல்ல யாழ். அரச அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்ட உரவகைகளை உடனடியாக கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை தாம் செய்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் விளக்கம் கூறுகையில் தற்போது கிளிநொச்சியில் நடைபெற்று வரும் சிறுபோகம் சிறந்த விளைச்சலை தந்துள்ளதால் தகுந்த நேரத்தில் கொடுக்கவேண்டிய உரவகைகளைக் கொடுக்காவிடில் ஒரு ஏக்கருக்கு ஐந்து புசல் நெல் கூட எடுக்கமுடியாத நிலைக்கு சென்றுவிடும் ஆகவே உடனடியாக நாம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவையான இந்த உரத்தை எடுத்துச் சென்று விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்போவதாகக்கூறினார்.

**20 வீதம சேதம்**

கப்பலில் இருந்து இறங்குதுறைக்கு இந்த உரவகைகளை கொண்டுவரும் வேலைகள் நடைபெற்ற சமயத்தில் இந்த உரத்தில் இருபது வீதமானவை சேதமாகி போய்விட்டது என தமக்கு அறிக்கைகள் கிடைத்திருப்பதாகவும் இதனால் இந்த சேத வீதத்தை மேலும் அதிகரிக்காது பாதுகாத்துக் கொள்ள உடனடியாக கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று பங்கிடப்போவதாகவும் கூறினார். (லோ)

# சாவகச்சேரியில் கிராமிய எழுச்சிவிழா

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கூட்டாக இணைந்து ஜூன்மாதப் பிற்பகுதியில் கிராமிய எழுச்சி விழா ஒன்று நடாத்தப்பட இருப்பதாகசாவகச்சேரி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வை இராஜராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்

இவ் விழாவை முன்னிட்டு இப்பகுதியில் உள்ள கிராம

**தொண்டர்**

முன்னேற்றச் சங்கங்களுக்கிடையில் கவிதை, கட்டுரை, வில்லுப்பாட்டுக்கள், மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் உட்பட பன்ம் பாணி சேகரித்தல் போன்ற பல போட்டிகள் நடைபெற உள்ளதாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எமது செய்தியாளருக்கு தெரிவித்துள்ளார்.

கிராமியஎழுச்சிவிழாபோட்டிகள் பற்றிய விபரங்கள் கூடிய விரைவில் தெரிவிக்கப் படும் என அவர் கூறியுள்ளார். (24

# ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜூன் மாதம் நேர்முகப் பரீட்சை ஒன்று அந்தந்தப் பகுதிக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களை பயிலுனர் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டோருக்கே மேற்படி நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது. இவர்கள் அன்றைய தினம் தாம் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியதையும் இதுதொடர்பாக ஏற்கனவே தங்களால் வழங்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் நிரூபித்தல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் தகுதியற்றவர்கள் என பொது மக்கள் யாராவது ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில் இவர்களது நியமனங்கள் மீள் பரிசீலனை செய்யப்படும் அதன்பின் ஜூலை மாதம் முதல் இவர்களுக்கு உரிய நியமனம் வழங்கப்படும் என கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தென்பகுதியில் நடைபெற்றுள்ள முறை கேடுகளே வட பகுதியில் நியமனம் வழங்கத் தடையாக இருப்பதாகவும் அதனாலேயே மேற்படி பரீட்சையை நடாத்தி ஊழல்களைக் கண்டறிய வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ஆயினும் வட பகுதியில் இதுவரை பெயர்ப் பட்டியலில் இடம் பெற்றவர்கள் பற்றிய ஆட்சேபனை எதுவும் திணைக்களத்திற்குக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சை முடிவடைந்த பின் மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது. (ச)

# உப்புக் கூட்டுத் தாபனத்தில் திருப்தியான பதிலில்லை

(நமது நிருபர்)

வட பகுதியில் முற்றாக ஸ்தம்பித்துப் போயுள்ள உப்புச் செய்கை பற்றியும் உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான சம்பளம் பற்றியும் கொழும்பு உப்புக் கூட்டுத்தாபனத்துடன் பேசச் சென்ற யாழ். மாவட்ட உப்புக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்கள் கொழும்பிலிருந்து எதுவித பதிலும் அளிக்காத நிலையிலேயே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த பதினொரு மாதகாலமாக இந்த கூட்டுத்தாபன ஊழியர்கள் எதுவித வேதனமும் இன்றி வீடுகளில் தங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (லோ)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

**வீரவேங்கை ஆனந்தன் செல்வன்**

(கமலநாதன் பத்மநாதன்)
பூநகரி

தாயின் மடியில்: 19-7-1972
தாயகவிடிவில்: 29-4 1991

மறைந்தும் மறையாத -- எமது
அன்புத் தம்பியே ஆனந்தனே
எங்கள் அனைவரின் நெஞ்சிருக்கும் வரை
நினைவிருக்கும்
புன்னகை நிறைந்த உன் எழில் முகத்தை
எங்கே நாம் காண்போம் --- நீண்ட
நாட்களாக காணாமல் ஏங்கித் தவித்த
எங்களுக்கு இந்தச்சோக செய்திதான்
கிடைத்தது. உன் புகழுடம்பைத் தான்
காண முடிந்தது? ஈழ மண்ணுக்கு --- உன்
இன்னுயிர் கொடுத்து சிரித்த முகத்துடன்
சென்றாயே.

''உனது நினைவலைகள் எங்கள்
நெஞ்சில் என்றென்றும் நிலைக்கும்.''

72, ...நகர் கிளிநொச்சி (B/ 2569) மா மகேந்திரம். குடும்பத்தினர்


# 60 ஏக்கர் ஒதுக்கீடு

(டில்லி)

சிறி பெரம்புதூரில் மரணமடைந்தராஜீவ்காந்திக்கு ஞாபகச் சின்னம் அமைக்க யமுனா நதிக்கரையில் 60 ஏக்கர் காணியை இந்திய அரசாங்கம் ஒதுக்கிக் கொடுத்துள்ளது


## செய்தியாளர் தேவை

ஈழநாதத்திற்குச் செய்தியாளர்கள் தேவை. செய்திகள் சேகரிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி ஜூன் மாதம் மூன்றாம் திகதியாகும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
ஈழநாதம், 31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

## கிளின்கட் அறிவித்தல்

உரிமையாளரின் சுகயீனம் காரணமாக மறு அறிவித்தல் வரை ஸ்தாபனம் மூடப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

(B-2593)

## நினைவு கூருகின்றோம்...

**1991-05-29**



கப்டன் **சிலன்**
(முருகன் ஜெயச்சந்திரன் - தொண்டமானாறு)

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் அரியாலையில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் விமானக்குண்டு வீச்சினால் வீரமரணமடைந்த
**குபேரன்/குமார்** (இராசரத்தினம் உதயகுமார் - அரியாலை)

இதே ஆண்டு வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட 'ஒப்பறேசன் லிபறேசன்' நடவடிக்கையின் போது திக்கத்தில் எறிகணைத் தாக்குதலினால் வீரமரணமடைந்த
**பாபு** (நாகராசா சிதம்பர நடராசன் - அல்வாய் மேற்கு)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
**குட்டி** (சோமன் யோகலிங்கம் - அக்கரைப்பற்று)

1988ஆம் ஆண்டு உடுப்பிட்டியில் இந்தியப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து கைக்குண்டால் தன்னைத்தானே அழித்துக்கொண்ட
**கப்டன் சீலன்** (முருகன் ஜெயச்சந்திரன் - தொண்டமானாறு)

1989ஆம்ஆண்டு மாமுனையில் இருந்த எமது முகாமொன்றை இந்தியப்படையினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த
**சூரி** (கறுப்பையா செல்வகுமார் - உடுத்துறை தெற்கு, தாளையடி)
**கஜன்** (கனகசபை தர்மராசா - கரணவாய் தெற்கு)

இச்சுற்றிவளைப்பின் போது காயமடைந்து சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**லெப்.முத்து** (சுந்தரலிங்கம் ஞானவேல் - மானாங்கானை, வல்வெட்டித்துறை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து பணியாற்றியவராவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2588)

※ சிந்தனைக்கு ※

நேர்மையான ஒழுக்கமுடையவனும், நிம்மதியாக வாழ முடியாத அண்டை வீட்டுக்காரனுக்கு அது மனம் ஒப்பாவிடில்.

— யோஹன் ஃப்ரிட்ஷ் ஹில்லர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 29.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ.எண் 05

# தமிழக அரசியலும் தமிழ் அகதிகளும்

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாகவே முன்வந்து தமிழகத்தை விட்டு வெளியேற வேண்டும் அல்லது அவர்கள் தமிழக மக்களினாலேயே பலவந்தமாக வெளியேற்றப்படுவார்கள் என தமிழ் நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார். இதே தொனியை ஒத்த, அதேவேளை சற்று மாறுபட்ட ரீதியில் அ.இ.அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதா இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழ் நாட்டை விட்டு உடன் இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை தமிழகத்தில் உள்ள இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் பெரும் அச்சத்துடன் வாழ்வதாகவும், அவர்கள் தங்கியிருந்த குடிசைகள் பன்னிரெண்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் அகதிமுகாம்கள் மீது தீவிர கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகின்றது.

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இந்திய சமாதான ஒப்பந்தத்தின் மூலம் தமிழர் மீது ஒரு முடிவைத் திணித்ததை எதிர்த்ததில் இருந்தே இந்திரா காங்கிரஸ் கட்சி இலங்கைத் தமிழர் மீது வீண் வர்மம் பாராட்டி வருகின்றது. இதன் காரணமாக சிறிலங்கா இராணுவத்தினரின் படுகொலைகளுக்கு அஞ்சி இம்முறை இலங்கைத் தமிழர் தமிழ்நாடு சென்றபோதே அவர்களை வேண்டா விருந்தாளியாகவே அக்கட்சி கருதி வந்தது.

அத்தோடு இலங்கைத் தமிழர் விவகாரத்தை தமது உள்நாட்டு அரசியலுக்கு ஆதாயமாக்கி இலங்கைத் தமிழரினால் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாகப் போராட்டங்கள் நடத்தினர். இந்த குற்றச் சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானதாக இருந்தும் தனது ஆட்சி அதிகாரத்தைப் பேணுவதற்காக ஆட்சியில் இருந்த தி.மு.கவினரும் இலங்கைத் தமிழருக்கு நெருக்கடிகளைக் கொடுத்தனர். நோயாளிகள் உட்பட நூற்றுக் கணக்கில் கைது செய்து காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

1983 இல் இலங்கையில் தமிழர் தேசிய இனப் போராட்டம் கூர்மை அடைந்ததில் இருந்தே இவ்வாறான ஒரு நிலையே தொடர்ச்சியாக இந்திய அரசாங்கத்தினாலும், அரசியல் கட்சிகளினாலும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இலங்கைத் தமிழரின் துயர் அவர்கள் கண்களில் பட்டதாகவில்லை. இலங்கையில் சிறிலங்கா இராணுவத்தினரின் படுகொலைகளுக்கு அஞ்சி சிறு வள்ளங்களில் ஆழ்கடல் தாண்டி வந்தவர்களின் துயர் அவர்களுக்குப் புரிவதில்லை. இம்முறை 1990 ஜூன் மோதல் தொடங்கியதில் இருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கடல் கடக்க முற்பட்ட மூந்நூறுக்கு மேற்பட்ட இலங்கைத்தமிழர் கடலுக்குப் பலியாகியமை அவர்களுக்குத் தெரியவில்லை.

அவர்களுக்கு இலங்கைத் தமிழர் விவகாரம் தமது அரசியல் இலாபம் தேடும் ஒரு விவகாரமாக மட்டுமே இருக்கின்றது. இந்திய மத்திய அரசாங்கத்தைப் பொறுத்து இந்தியாவின் விரிவாக்கத்திற்கான ஒரு விவகாரமாகவும், அரசியல் கட்சிகள் குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளைப் பொறுத்து தமிழக அரசைக் கைப்பற்றுவதற்கான ஒரு விவகாரமாக மட்டுமே உள்ளது.

இந்நிலையில் இலங்கைத் தமிழரை வேண்டியபோது அணைப்பதும், தேவையற்றபோது உதறுவதும் அவர்கள் பொதுக்கொள்கையாகவுள்ளது. ஆனால், தமிழக மக்கள் நிலை அவ்வாறானதாக இல்லை. வாழப்பாடி ராமமூர்த்தி கூறுவதுபோன்று தமிழக மக்கள் இலங்கைத் தமிழரை வெறுப்பதாக இருந்தால் இலங்கைத் தமிழர் ஒரு நாள்கூட தமிழகத்தில் தங்கியிருக்க முடியாது. 600 இலட்சம் தமிழக மக்களின் எதிர்ப்பை இரண்டு இலட்சம் மக்கள் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்?

அதேவேளை, தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் மிரட்டலுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கைத் தமிழரும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் எந்த நெருக்கடியின் மத்தியிலும் தமது சொந்த மண்ணிலேயே தாம் சுதந்திரமாக வாழலாம். அல்லது சுதந்திரத்திற்காகப் போராட முடியும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பாதுகாப்புத் தேடி ஓடிய இனம் எவையும் அங்கு சுதந்திரமாக வாழ்வதாக இல்லை. இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் வேண்டாத விருந்தாளிகளாகவுமே உள்ளனர். ஆனால், சொந்தமண் ஒருவரையும் ஒருபோதும் வேண்டா விருந்தாளியாகவோ அன்றி விரட்டுவதாகவோ இருக்காது.

முப்பது வருடப் போராட்டத்தின் பலன்

# எரிட்ரீரியா முழுமையாக போராளிகள் வசம்

(லண்டன்)

எரிட்ரீரிய மக்கள் விடுதலை முன்னணியினர் (ஈ.பி.எல்.எப்) துறைமுக நகரான அசாபியைக் கைப்பற்றியதன் மூலம் எரிட்ரீரியாவின் முழுப்பிரதேசத்தையும் எத்தோப்பிய இராணுவத்தினரிடமிருந்து மீட்டு தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துள்ளனர்.

கடந்த முப்பது வருடங்களாக எத்தோப்பியாவில் இருந்து விடுதலை கோரிப் போராடி வரும் எரிட்ரீரிய மக்கள் முன்னணியினர் பல இழப்புக்களின் மத்தியில் தமது போராட்டத்தை நடத்திவந்தனர். தற்பொழுது எத்தோப்பிய தலைநகருக்கு வட கிழக்கே 375 மைல் தொலைவிலுள்ள செங்கடல் துறைமுகமான அசாப்பை கைப்பற்றியதன் மூலம் எத்தோப்பிய இராணுவத்தினரிடம் இருந்து எரிட்ரீரிய பிரதேசம் முழுவதையும் மீட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் கடந்த வருடம் எரிட்ரீரிய மக்கள் விடுதலை முன்னணி மசாவா என்ற துறைமுகத்தையும் கைப்பற்றியிருந்தது. தற்பொழுது அசாப் துறைமுகமும் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து எத்தோப்பியாவிற்கான சகல விநியோகங்களும் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன.

அதேவேளை, எத்தோப்பிய கடற்படையினரும், இராணுவத்தினரும் இத்துறைமுக நகரில் இருந்து ஆயிரக்கணக்கில் கப்பல்களில் தப்பியோடியுள்ளனர்.

எரிட்ரீரியப் பிரதேசம் விடுதலை முன்னணியினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ளபோது எத்தோப்பியாவின் ஏனைய பகுதிகளைக் கிளர்ச்சிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். எத்தோப்பிய சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்றிய கிளர்ச்சிப் படைகள் எத்தோப்பியாவைச் சுற்றி வளைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அடிஸ் அபாபாவிற்குள் கிளர்ச்சிப்படைகள்

(அடிஸ் அபாபா)

எத்தியோப்பிய அரசாங்கத்துடனும், மற்றைய இரண்டு கிளர்ச்சிக் குழுக்களுடனும் லண்டனில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும், எத்தியோப்பிய புரட்சி ஜனநாயக முன்னணி தமது படைகள் தலைநகருக்குள் நுழைவதாக அறிவித்துள்ளது.

சட்டம், ஒழுங்கு முறைகள் அங்கு சீர்குலைந்து விட்டதால் தமது படைகள் தலைநகர் அடிஸ் அபாபாவிற்குள் நுழைந்து கொண்டிருப்பதாக அந்த முன்னணி தெரிவித்துள்ளது.

மக்களை வீட்டிற்குள்ளேயே இருக்குமாறு தெரிவித்த இந்த முன்னணி அரசாங்கப் படைகளை சரணடையுமாறும் கேட்டுக் கொள்கிறது.

இதே நேரம் அமெரிக்காவும் நிலைமையை கட்டுப்படுத்த கிளர்ச்சிப்படைகள் தலைநகருக்குள் நுழைவதையே விரும்புகிறது என்று தெரிவித்துள்ளது. நேற்று அமெரிக்காவின் இந்த யோசனையை லண்டனில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் மத்தியஸ்தராக இருக்கும் அமெரிக்க உயர் அதிகாரி தெரிவித்தார்.

ஆனால் கிளர்ச்சியாளர்களை அமெரிக்கா இவ்வாறு தூண்டி விட்டால் சமாதானப் பேச்சுக்களில் தமது அரசாங்கம் தொடர்ந்து கலந்து கொள்ளாது என்று எத்தியோப்பிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

# நிபந்தனையின்றி சீனா வாணிபச் சலுகை பெறும்

(வாஷிங்டன்)

சீனாவிற்கு அளித்துள்ள வாணிபச் சலுகை அந்தஸ்தை நிபந்தனையின்றி புதுப்பிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் சீனாவின் இந்த வாணிப சலுகை காலாவதியாகின்றது என்றும் அதனால் இச் சலுகையினை நிபந்தனையின்றி புதுப்பிக்கப் போவதாகவும் ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

இச் சலுகையின் மூலம் சீனா கணிசமான அளவு வாணிப வரியினை மிச்சப்படுத்த முடியும் என்றும் 1990 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கான சீனாவின் ஏற்றுமதி 1500 கோடி டொலராக இருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவதால் அதற்கு வாணிபச் சலுகையைப் புதுப்பிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளனர்.

இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள

# மத்திய அமைச்சர்களுக்கு அனுமதி மறுப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளச் சென்ற மத்திய அமைச்சர்கள் இருவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

உள்விவகார அமைச்சர் சுபோத்கான் சகாய், பெற்றோலிய அமைச்சர் சத்தியப் பிரகாஷ் ஆகிய இருவருமே இவ்வாறு தடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் சந்திரசேகர் அரசாங்க அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் என்பது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குத் தெரியாது என்பதாலேயே இவ்வாறு தடுக்கப்பட்டார்களாம்.

ராஜதந்திரிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளே செல்லும் வழியாகப் போக முற்பட்டபோதே இவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடுக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோழியா குள, மாதர் பணிக்கர் குள

# மாணவர் கல்வி கற்க மரநிழல் கூட இல்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மாதர் பணிக்கர் மகிழங்குளம், கோழியா குளம் கொந்தக்காரன்குளம் ஆகியஇடங்களில் உள்ள பாடசாலைகள் சமீபத்திய குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல்களினால் சேதமடைந்ததை அடுத்துஇப்பாடசாலைகளில் கல்வி பயின்று வந்த மாணவர்கள் பாடசாலை செல்வதைக் கைவிட்டுள்ளனர்.

இப் பாடசாலைப் பகுதியில் உள்ள மரங்கள் கூட குண்டு வீச்சினால் சேதமடைந்த காரணத்தினால் மாணவர்கள் மரங்களின் கீழ் அமர்ந்துகூடகல்வி பயில முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டது.

ஒமந்தைகொத்தணிப் பாடசாலையின் கட்டடங்கள் குண்டு வீச்சினால்தகர்ந்து போயுள்ள காரணத்தினால், ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் தவிப்பதை அவதானிக்கமுடிகிறது. (தி)

# கடல்வள ஆராய்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடகிழக்குப் பகுதிகளில் கடல்வள ஆராய்ச்சி வேலைகள் அனைத்தையும் கடற்தொழில் அமைச்சு நிறுத்தியுள்ளது.

இப் பகுதியில் உள்ள கடற்கரையோரங்கள், ஆழ்கடல்பகுதிகள் ஆகியவற்றில் காணப்படும் தாவர மற்றும் விலங்கு இனகடல்வாழ் உயிரினங்களில் இருந்து உச்ச பயனைப் பெறுவது மற்றும் கடல் வளங்களை பதனிடல், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்களில்முன்னேற்றகரமான புதிய நடைமுறைக்கொள்கைகளை உருவாக்குவது தொடர்பாக கடற்தொழில் அமைச்சினால் நடைமுறைப் படுத்தப் பட்டு வந்த ஆராய்ச்சித்திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டுள்ளது.

ஆனால் நாட்டின் ஏனைய பகுதிகளில்இந்தஆய்வு வேலைகள் வெளிநாட்டு நிதி உதவியுடன்மிகவும்வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் வடகிழக்கின்கடல் வளங்களை முற்றாகப் பயன்படுத்தி பயன் பெற முடியாத நிலை தொடர்கின்றது.

நாட்டின் மூன்றில் இரண்டு பகுதி கடல் உணவு இப்பகுதிகளில் இருந்தே கடந்தபலவருடங்களாக பெறப்பட்டு வந்தது என்பதுகுறிப்பிடத்தக்கது. (ஈ)

# இளம் குடும்பப் பெண் மரணம்

(புங்குடுதீவு)

வயிற்றோட்டத்திற்கு இளம் குடும்பப்பெண்ஒருவர் பலியாகியுள்ளார்.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வே சாந்தி வயது 19 என்ற இளம்குடும்பப் பெண்ணே இவ்வாறு பரிதாபகரமாக நோய்க்குப் பலியானவர் ஆவர்.

பிரஸ்தாப பெண்மணி ஒரு நாள் மட்டும் வயிற்றோட்டத்தால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (22)

நானாட்டான் இராணுவத்தால்

# இருவர் சுட்டுக்கொலை பதினைந்துபேர் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு பொதுமக்களை சுட்டுக் கொன்றுள்ளதுடன் அகதி முகாம்களில் புகுந்து இருபதுக்கும் மேற்பட்டோரைக் கைது செய்து கொண்டு சென்றுவிட்டனர்.

நேற்று முன்தினம் நண்பகல் ஒருமணியளவில் நானாட்டான் கிராமத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கஞ்சியன்குளம் எனும் பகுதியூடாக ஒரு பவல் இராணுவ கவசவண்டியுடனும் ஒரு பிக்கப் வாகனத்திலும் வந்து புதுக்கமம் எனும் கிராமத்தினுள் புகுந்து பதினைந்து பொதுமக்களை கைதுசெய்து கொண்டு சென்றனர்.

இதேசமயம் நறுவிலிகுளத்திலிருந்து இரண்டு பொதுமக்கள் உழவு இயந்திரத்தில்வந்து கொண்டிருக்கும்போது அந்த இருவரையும் சுட்டுக்கொன்று விட்டனர். நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சி. செபமாலை (வயது 62), புதுக்கமத்தைச் சேர்ந்த தி. தொமஸ் (வயது 33) ஆகிய இருவருமே இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டோராவார்.

இச்சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தசமயம் அவ்விடத்திற்கு விரைந்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது திடீர் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் இராணுவத்தினர் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

கோரகல்லி மடுவில்

# ஆண்கள் பெண்கள் உட்பட பதினொரு தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கும்புறுமூலை முகாமிலிருந்து வெளியேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் கோரகல்லி மடு பகுதியில் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவம் கடந்த 14-05-91 அன்று இடம் பெற்றுள்ளது. அதன் பின்னர், வேலுப்பிள்ளை ஜீவரட்ணம் (17), வேலுப்பிள்ளை அன்னலிங்கம் (21), கந்தையா பூபாலபிள்ளை, தம்பிராசா நடராசா (30), பொன்னுத்துரை ஆகியோர் உட்பட ஆறு ஆண்களையும், இராசலிங்கம் இந்திராணி (35), கோவிந்தன் தங்கேஸ்வரி (24) கிருஷ்ணன் கனகம்மா (35) ஆகியோர் உட்பட ஐந்து பெண்களையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

# இரு கிராமசேவகர்களை ரெலோ கடத்தியது

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக வைத்து பேருவாவெளி, கள்ளிச்சைவடமுனை ஆகிய பகுதிகளின் கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் ரெலோவினரால் கடத்தப்பட்டுள்ளனர் கடந்த 17. 05 91 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் சந்திரமோகன், செல்வராசா என்னும் இரு கிராம சேவை உத்தியோகத்தர்களே கடத்தப்பட்டவர்களாவர். இவர்கள் பற்றி இதுவரையில் எந்தத் தகவலும் வெளிவரவில்லை.

---

திவுப்பகுதியில்

திவுப்பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ள மக்களில் பலர் கடும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையிலேயே இருப்பதாகவும் இவர்களை இராணுவத்தினர் கோயில்களில் அமைக்கப்பட்ட முகாம்களில் தங்க வைத்துள்ளதாகவும் இவர்களுக்கு போதிய வசதிகள் வழங்கப்படவில்லை என்றும் சிலர் நோய் காரணமாக மரணத்தைத் தழுவும் நிலையில் இருப்பதாகவும் யாழ் செயலக அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாடுகளையும் தகவல்களையும் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

கொழும்பு செல்லும் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மற்றும் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகளுடனும் மேற்படி விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைநடாத்தி குறைந்த பட்சம் நோயினால் பீடிக்கப்பட்ட மக்களையாவது மீட்டெடுக்க முயற்சி எடுக்கப்படவிருக்கின்றது. (க)

---

புல்மோட்டையில்

பற்றப்பட்டன.

இத்தாக்குதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் எட்டு இராணுவம் கொல்லப்பட்டதாகவும் ஆயுதங்கள் புலிகளால் அபகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தன.

---

யாழ். வரும்

கொண்டு வந்த மருந்துப் பொருள்களுக்கு நான்கு லட்சத்து முப்பதினாயிரம் ரூபாவை கப்பல் கூலியாக அறவிட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் மருந்துப் பொருள்களின் விலை குறித்து அவர்கள் தகவல் தெரிவிக்கையில் யாழ் நகரில் மருந்து பொருள்கள் விலை ஏற்றத் தாழ்வு இன்றி அனைத்து மருந்துக் கடைகளிலும் விற்கப்படும் என்றும்தூர இடங்களில் பயணச் செலவு எனும் பெயரில் விலைகள் சிறிதளவு அதிகரித்திருக்கலாம் என்றும் கூறினர். (லோ)

---

திரிவேணி

நண்பர்கள், இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள் மத்திய பெற்றோலிய அமைச்சர் சத்தியப்பிரகாஷ் மாளவியா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

முன்னதாகப் புதுடில்லியிலிருந்து அஸ்திக் கலசங்கள் அலகபாத் வந்து சேர்ந்தன சிறிது நேரம் ஆனந்த பவனில் அஸ்திக் கலசங்கள் புற்தரையில் வைக்கப்பட்டன. தொடர்ந்து தாற்போல் மறைந்த தலைவருக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பீரங்கி வண்டியில் அஸ்திக் கலசங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

பல மாநிலங்களில் வைக்கப்பட்டிருக்கும் அஸ்திக்கலசங்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள் சென்னையில் தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயணசிங்கும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலரும் அஸ்திக் கலசத்துக்கு மலர் வளையங்கள் வைத்தார்கள்.

---

# பொலிஸில் பதிவு செய்ய பணிப்புரை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வீடுகளின் பிரதான குடியிருப்பாளர் தமது வீடுகளில் தங்கியிருப்பவர்களின் விபரங்களை அண்மையில் உள்ள பொலிஸ்நிலையத்தில் பதிய வேண்டும். அவசரகாலச்சட்ட 21 (இ) விதிக்கமையப் பொலிஸ் மாஅதிபர் இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

குடும்ப அங்கத்தினர், தங்கிருப்பவர்கள், வேலையாட்கள் ஆகிய சகலரின் விபரங்களும் மேற்படி பணிப்புரைக்கிணங்க பதியப்பட வேண்டும்

# 3 முஸ்லிம்கள் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த ஞாயிறன்று இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரிய வருகிறது.

# தற்கொலை முயற்சி

(பருத்தித்துறை)

குடும்பப்பெண் ஒருவர் மண்ணெண்ணை ஊற்றி தனது உடலை தீமூட்டி தற்கொலை செய்ய முயற்சி செய்ததில் பலத்த காயமடைந்துள்ளார்.

நி. அனுஸியா (வயது 21) என்ற இவ் இளம்பெண் குடும்பத் தகராறு காரணமாகவே தனது உடலுக்கு தீமூட்டிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஏ)

---

இல. தமிழ்

படவேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி ஆகியோர் இலங்கைத் தமிழரை வெளியேற்ற வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆனால் மத்திய நீதித்துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி இவ் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாது என்றும். உடனடியாக அவர்கள் வெளியேற்றப்படமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

---

ராஜீவைக்

குண்டைத் தயாரித்திருக்கலாம் எனவும் அவர் ஊகம் வெளியிட்டார்.

ராஜீவ்காந்தி மீண்டும் பதவிக்கு வந்தால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கக் கூடும் என்னும் பயம் இலங்கை அரசுக்கு இருந்தது எனக் கூறிய திரு கிட்டு இலங்கையரசும் சில தமிழ்க் குழுக்களும் இப்படு கொலையைச் செய்திருக்கக் கூடும் எனவும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார்.

புலிகளைப் பொறுத்தவரை இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னர், இந்தியாவுடன் படிப்படியாக உறவை வளர்த்துக் கொண்டு வந்தோமெனவும் ஆனால் இந்திய அரசியலில் தலையிடத் தாம் ஒருபோதும் விரும்பியதில்லை எனவும் திரு. கிட்டு தெரிவித்தார்.

மேலும் ராஜீவ்காந்தியை கொலை செய்ய அவர் மீது எந்தக் காழ்ப்புணர்வோ, காரணமோ புலிகளுக்குகிடையாது எனவும் திரு கிட்டு உறுதிபடக் கூறியுள்ளார்.

---

அலுவலகர்

ளார் அவர் மேலும்தெரிவிக்கையில் புலிகளுக்கு உதவுவோரை புலன் ஆய்வுத் துறையினர் எந்த நிலையிலும் கைது செய்யலாம் எனவும், டயர் மாலை போடப்படலாம் எனவும், அதற்கு தாம் பொறுப்பேற்க இயலாதெனவும் கூறியுள்ளார்

---

# பேசாலை அகதிமுகாமினுள் வைத்துப் பலர் கைது

(மன்னார்)

கடந்த இருபத்தாறாம்திகதி மன்னார்தீவு இராணுவத்தினர் அத்தீவிலுள்ள பேசாலையில் உள்ள அகதி முகாமினுள் புகுந்து நாற்றைம்பது பொதுமக்களை கைது செய்தனர். பின்னர் இவர்களில் ஏழுபேரை தமது மன்னார்தீவு இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர்.

ஊழியர் சேமலாப நிதியத்தின்

# முதலீடு கடந்த ஆண்டு 3,800 கோடியாக அதிகரிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீடு கடந்த ஆண்டு முடிவில் ரூபா 3,800 கோடி 40 லட்சமாக அதிகரித்துள்ளது.

வைப்புச் சான்றிதழ்கள், தேசிய பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்கள், திறைசேரி உண்டியல்கள், அரசாங்க அடமான முதலீட்டு வங்கிப்பத்திரங்களுக்காக இந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் கடந்த ஆண்டில் ரூபா 400 கோடிக்கும் அதிகமானதாகும்.

ஊழியர் சேமலாபநிதி செலுத்துபவர்கள் நிதியத்துக்குச் செலுத்திய பணம் ரூபா 390 கோடிக்கும் அதிகமானது. ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தினரின் தொகை சுமார் 41,000 ஆகும்.

கிளிநொச்சி

# திணைக்களங்களுக்கான கட்டுநிதி கிடைப்பதில்லை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்களுக்கான கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக மேற்படி திணைக்களங்களுக்குரிய கட்டுநிதி உரிய காலத்தில் வந்து சேர்வதில்லை. இதனால் இத் திணைக்களங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படும் நிலை உருவாகுவதை தடுப்பதற்காக இம் மாவட்டத்தின் செயலக உயர் அதிகாரிகள் சுழற்சி முறையில் விற்பனை செய்யப்படும் விவசாய உர வகைகளின் மூலம் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி வருகின்றனர். (க)

# அமெரிக்க ஆயுதங்கள் தென் ஆபிரிக்கா. விற்பனை

(வாஷிங்டன்)

அமெரிக்க ஏவுகணைகள் தென் ஆபிரிக்காவுக்குச் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1984 - 1988 காலப் பகுதியில் அமெரிக்க போர் ஆயுதங்களும், ஏவுகணைகளும் தென். ஆபிரிக்காவுக்கு இரகசியமாக விற்கப்பட்டுள்ளன. இதைத் தெரிந்தும், தெரியாதது போல் அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவு (சி. ஐ. ஏ.) இருந்துவிட்டது.

அமெரிக்க தொழில் நுட்பம் தென் ஆபிரிக்கா வழியாக ஈராக் சென்றடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அமெரிக்க சயஷ்டி ஆயுத ஏற்றுமதிச் சட்டத்துக்கு முரணாக இந்த வியாபாரம் இடம் பெற்றுள்ளது. இன ஒதுக்கல் கொள்கையைப் பின்பற்றும் தென்ஆபிரிக்காவுக்கு எதிரான வியாபாரத் தடையையும் இந்த ஆயுத விற்பனை மீறியுள்ளது

---

# யாழ்ப்பாண பஸ்நிலையம் கழற்றப்படுகிறது

(நமது நிருபர்)

யாழ்ப்பாண நகரின் பழைய பஸ்நிலையம் அக்குவேறு ஆணிவேறாக கழற்றி எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வேலைகள் நேற்று நள்ளிரவுவரை நடைபெற்ற வண்ணம் இருந்தன. பகலில் வெயில் கொடுமை காரணமாக இரவு வேளையில் தாம் இந்த கடமையை செய்வதாக அங்கு பணிபுரிந்தவர்கள் கூறினார்கள். (லோ)

---

கிளர்ச்சிப்

படைகளுக்கும், அரசபிரதிநிதிகளுக்கும் லண்டனில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டன. இப் பேச்சுக்களில் நடுவராகக் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதிநிதி ஈ. பி. ஆர். டி. எவ் இயக்கம்நாட்டை நிர்வகிக்கும் என்றும், யூன் மாத இறுதிக்குள் எத்தியோப்பியாவில் சண்டையிடும் மூன்று கிளர்ச்சிப் படையினரும் கலந்து கொள்ளும் கூட்டம் லண்டனில் கூட்டப்படும் எனவும், அப்போது இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசப்படும் எனவும் கூறியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொண்ட எத்தியோப்பிய அரசத் தரப்பினர் சிறுபான்மையினரிடம் அரசு ஒப்படைக்கப்படுவதாக குற்றஞ் சாட்டியுள்ளனர். (முன்னைய செய்தி உள்ளே)

---

மூன்று

கிடைத்த வாய்ப்பாக தான் கருதுவதாகவும், இவ் விசாரணையில் அரசியல் தலையீடு எதுவும் இருக்கும் எனத்தான் நம்பவில்லை எனவும் கருத்து தெரிவித்துள்ளார்.

---

இந்திய தேர்தல்

வேண்டிய இரண்டாம் மூன்றாம், கட்ட வாக்குப்பதிவுகள் ஒத்தி வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு யூன் 12 ஆம் திகதியும் மூன்றாம் கட்ட வாக்குப் பதிவு யூன் 15 ஆம் திகதியும் நடைபெறும் என்று டி. என் சேஷன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

அசாமில் யூன் 6 ஆம் திகதியும், 8 ஆம் திகதியும் தேர்தல் நடைபெறும். பஞ்சாப்பில் யூன் 22 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும்.

இதே வேளை பல மாநிலங்களில் திட்டமிட்டபடி யூன் மாதம் 12 ஆம் திகதி ஆயிரம்வாக்குச்சாடிகளில் மறு வாக்குப் பதிவு நடைபெறும்.

பஞ்சாப்பில் புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் நடவடிக்கைகளில் சட்டப் பேரவையின் ஆறு தொகுதிகளில் வேட்பு மனுப் பரிசீலனை மேற்கொள்ளப்படவுள்ளது. வேட்பாளர்கள் மரணமுற்றதை அடுத்து இந்த தொகுதிகளில் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது